


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், டிஜிதன் இந்தியா குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், நடமாடும் வாகனத்தை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (15.03.2017) கொடியசைத்து, துவக்கி வைத்தார். நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 190/2017 நாள்:15.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், டிஜிதன் இந்தியா பணமில்லா பரிவர்த்தனை குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், நடமாடும் வாகனத்தை இன்று (15.03.2017) கொடியசைத்து, துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், டிஜிதன் இந்தியா பணமில்லா பரிவர்த்தனை குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், நடமாடும் வாகனத்தை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (15.03.2017) கொடியசைத்து, துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள், டிஜிதன் இந்தியா திட்டம் (பணமில்லா பரிவர்த்தனை) குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, அவர்கள் அத்திட்டத்தின் மூலம் முழுமையாக பயன்பெற வேண்டும் என்பதற்காக, பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் டிஜிதன் இந்தியா நடமாடும் விழ்ப்புணர்வு வாகனம் இன்று துவக்கி வைக்கப்பட்டது.

இந்த வாகனத்தின் மூலம், முதல்நாளில் கடையால், அருமனை, இரண்டாவது நாளில் இடைகோடு, பளுகல், மூன்றாவது நாளில் பைங்குளம், கடியபட்டிணம், நான்காவது நாளில் திற்பரப்பு, குலசேகரம், ஐந்தாவது நாளில் கல்லுக்கூட்டம், குளச்சல், ஆறாவது நாளில் ஆரல்வாய்மொழி, நீண்டகரை - டி ஆகிய இடங்களில் நேரடியாக சென்று, விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பாக, நமது மாவட்டத்தில் ஆறு நாட்கள், டிஜிதன் இந்தியா பீம் ஆப் (BHM App) மூலம் பணமில்லா பரிவர்த்தனை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதை குறித்து, பொதுமக்கள் வசிக்கின்ற இடத்திற்கு இந்த வாகனத்தின் மூலம் சென்று, குறும்படம் வாயிலாகவும், கிராமிய பாடல்கள் வாயிலாகவும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், மாவட்ட தகவலியல் அலுவலர் திரு. ஜி. விக்டர் ஞானதேசன், நாகர்கோவில் இ-கவர்னென்ஸ் திட்ட மேலாளர் திருமதி. ஷாமிளா, துணை பொது மேலாளர் (பிஎஸ்என்எல்) திரு. கே.சந்திரன், மாவட்ட எல்காட் மேலாளர் திரு. ஜோஸ்மணி, சிகரம் கலைக்குழு தலைவர் (நாகப்பட்டிணம்) திரு. இ. முருகையன், டிஜிதன் இந்தியா திட்ட அலுவலர் (நாகர்கோவில்) திரு. கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.